

திருவள்ளூர் மாவட்ட ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சியில் ஆவடி தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பொது நிதியிலிருந்து 3 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள் தொடக்க விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டை தொடங்கி வைத்து புதிய பள்ளிக்கட்டிடம் ரேசன் கடை கட்டிடத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா, ஆவடி பகுதி கழக பொறுப்பாளர் சண் பிரகாஷ், ஆவடி பகுதி கழக செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், மண்டல குழு தலைவர்கள் வி.அம்மு, நா.ஜோதிலட்சுமி, ஆவடி மாநகராட்சி பணிக்குழு தலைவர் சா.மு.நா.ஆசிம் ராஜா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் உள்பட பலர் உள்ளனர்

### இந்து சமய அறநிலையத்துறைத் திட்டங்கள்

# சட்டமன்ற அறிவிப்புகளின் பணிமுன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

சென்னை, ஆக. 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சீர்மிகு வழிகாட்டுதலின் படி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று (20.08.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், சட்டமன்ற அறிவிப்புகள், திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் (மாஸ்டர் பிளான்) திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதி திரு க்கோயில் திருப்பணிகள், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் கட்டணமில்லா திருமணங்கள், மூத்த குடி மக்களுக்கான ஆன்மிகப் பயணங்கள், ஒருகால பூஜை திட்ட விரிவாக்கம் மற்றும் அதன் அர்ச்சர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை உயர்வு, அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் நலன் காக்கும் திட்டங்களின் செயலாக்கம், ஒருவேளை மற்றும் நாள் முழுவதும் அன்னதானத் திட்ட விரிவாக்கம் குறித்தும்,

2025 - 2026 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகளில் நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள் தவிர இதர அறிவிப்புகளின் பணி முன்னேற்றம், பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள் மற்றும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை உயர்த்தி வழங்குதல், திருச்செந்தூர் திருக்கோயில் கடற்கரை கடல் அரிப்பு தடுப்பு பணிகள், திருக்கோயி ல்கள் சார்பில் நடத்தப்படும் மகா சிவராத்திரி மற்றும் சித்தர் விழாக்கள், புதிய கல்வி நிறுவனங்கள் தொடங்குதல், திருத்தேர், திருக்குள திருப்பணிகள் மற்றும் மராமத்து பணிகள், ஆக்கிரமிப்பிலிருந்து திருக்கோயில் நிலங்களை மீட்கும் பணிகளின் பணி முன்னேற்றம் மற்றும் நில அளவைப் பணிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு திட்டங்கள் செயலாக்கம், மூன்று திருக்கோயில்களில் உயரமான முருகன் சிலைகள் அமைத்தல், திருக்கோயில் நிலங்களில் மரக்கன்றுகள் நடுதல், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள துறை சார்ந்த வழக்குகளின் நிலை மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய பொருண்மைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, திருமதி ந. திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பொ. ஜெயராமன், திருமதி கோ. செ. மங்கையர்க்கரசி, அரசு கூடுதல் செயலாளர் திருமதி சு,பூரணி, தனி அலுவலர்கள் (ஆலய நிர்வாகம்) தி.சுப்பையா திருமதி சு. ஜானகி, திருமதி கா. பரமேஸ்வரி, ந.சுரேஷ், சிறப்பு பணி அலுவலர் சி.லட்சுமணன், இணை ஆணையர்கள் திருமதி இரா. வான்மதி, திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (20.08.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் உயர்கல்வித் துறை தொடர்பான முக்கிய பொருண்மைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் .எம்.பி.விஜயகுமார், , (ஓய்வு), தலைமை பொறியாளர் (தொ.நு.பிரிவு) வெ.சுகுமாறன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 182 வது நாள்!

## திரு.வி.க.நகர் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, ஆக. 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 182 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (20.08.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 74, சந்தியப்பன் தெரு, ஆஷா நிவாஸ் அருகில், ஓட்டேரி. 2) வட்டம் 71 அ, B.S மூர்த்தி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா. வீரமணி, நா.துலு க்காணம், எம்.பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ர மூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி. தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### கரூர் தண்ணீர் பந்தல் பாளையம் – வீரராக்கியம் வரை

# ரூ.700 கோடியில் சுற்று வட்டச் சாலை!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!



கரூர், ஆக. 21 –

கரூர் தண்ணீர்பந்தல் பாளையம் முதல் வீரராக்கியம் வரை ரூ. 700 கோடி மதிப்பில் புதிய சுற்று வட்டச் சாலை அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார் என கரூரில் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி வார்டு எண் 8.9 மற்றும் மண்மங்கலம் வட்டம் ஆகிய பகுதிகளுக்கு ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். 26 பயனாளிகளுக்கு ரூ. 9.90 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ”உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 10000 முகாம்கள், கரூர் மாவட்டத்தில் 179 முகாம்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 60 முகாம்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 49333 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. இம்மனுக்களில் 18,074 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக் கோரிக்கை மனுக்களாகும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. சில மனுக்களுக்கு ஒருவார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட்டு தீர்வு வழங்கப்படுகிறது. அதிகபட்சம் 45 நாட்களுக்குள் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுவட்ட சாலை அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். கரூர் தண்ணீர்பந்தல் பாளையம் முதல் வீரராக்கியம் வரை மொத்த திட்ட மதிப்பு ரூ 700 கோடியில். புதிய சுற்றுவட்டச் சாலை அமைப்பதற்கான நிதிகளையும் அரசாணைகளையும் வழங்கியுள்ளார்கள். இதில் முதற்கட்டமாக நிலமெடுப்பதற்காக ரூ.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மண்மங்கலம் ஊராட்சியில் வட்டாட்சியர் அலுவலகம், புத்திரப்பதிவு அலுவலகம். மருத்துவமனை விரிவாக்க கட்டிடம் என வளர்ச்சித் திட்டங்களையும் வழங்கியிருக்கிறார்கள்.

‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் இன்றைய தினம் பொதுமக்கள் அளித்துள்ள கோரிக்கை மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்படும் எனும் உறுதியை தெரிவித்துக்கொண்டு. 5 ஆண்டுகள் தொடங்கி 40 ஆண்டுகள் வரை குடியிருந்தும் பட்டா இல்லாமல் வாழும் பொதுமக்களுக்கு பட்டா வழங்கப்படுவதற்காக 28,000 பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை கரூர் மாவட்டத்தில் 45000 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன இவ்வாறு செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 13 நபர்களுக்கு சாதிச் சான்று. வருமானச் சான்று. இருப்பிடச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று. சிறு குறு விவசாயி சான்று மற்றும் பட்டா மாறுதல் உள்ளிட்ட சான்றிதழ்களையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 6 பேருக்கு ரூ. 4.92 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவி, மாநகராட்சியின் சார்பில் 6 நபர்களுக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் பெயர் மாற்றத்திற்கான ஆணை, கரூர் நகர கூட்டுறவு வங்கி சார்பாக 1 நபருக்கு ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு அடமானக் கடனுதவிகளும் என மொத்தம் 26 நபர்களுக்கு ரூ.9.90 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, வெங்கமேடு சக்திவேல், மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி மதுராந்தகம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக சட்டத்துறை சார்பில் பாக முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பொன் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம். டி.ஆர்.சாரதி மணிமாறன் காஞ்சி தெற்கு மாவட்ட சட்டத்துறை அமைப்பாளர் கண்ணன், ஒன்றிய தலைவர் கே.சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்தும் சட்டத்துறை சார்பில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### கே.ஏழுமலை – ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்பு

# தியாகராயர் நகர் 133 ‘அ’ வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை – வி.மாரி அறிக்கை!

சென்னை, ஆக. 21 -

தியாகராயர்நகர் 133 அ வட்டச் செயலாளர் பி. மாரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராயர் நகர் மேற்கு பகுதி 133(அ) வட்ட வட்ட செயற்குழு கூட்டம் (22.08. 25 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் வட்ட அவைத் தலைவர் எஸ்.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு மற்றும் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, தியாகராயநகர் மேற்கு பகுதி செயலாளர் கே ஏழுமலை எம்.சி, தியாகராய நகர் தொகுதியின் பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தில் ஆலோ சனை வழங்க உள்ளார்கள். எனவே இக் கூட்டத்திற்கு 133 (அ) வட்ட கழக நிர்வாகிகள் பகுதி பிரதிநிதிகள் பாக பொறுப்பாளர்கள் (BLA2) மற்றும் ( BDA) நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி, வட்ட ,அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் பி.மாரி கேட்டுக்கொண்டுள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் குறை தீர்ப்பு மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ.அருண் , துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், மாவட்ட ஆட்சித் தலைவர் . இளம்பகத் .,மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.